DEVOUT INQUIRIES.

A conversation between a convert to Christianity and his minister bringing to view the change which true piety will produce in the heart and life.

பத்திநாட்டம்.

ஒரு சேஷன் தன் போதகரிடத்தில் மெய்யான தேவபத்தி ஏதென்ற விளுவினது.

சீஷன். எனக்கன்பானபோதகரேகிறீஸ்தமார்க்கமுறைப்படி நிதானமான தேவபத்தியுடையவனாயிருக்கநான்நடக்கவேண்டிலவிதப்படி?

போதகர். நமது இரட்சகராகிய கிறிஸ்து நாதர் போதித்திருக்கிற பிரகாரமாக உன் முழு இருதயத்தாலும், உன் முழு ஆத்துமாவினாலும், உன் முழு மனதினாலும், உன முழுப் பலத்தினாலும் உன் தேவனுடைய பராபரன்மேல் அன்பு வைத்து நீ உன்னை நேசித்திருக்கிறதுபோல மற்றவர்களையும்நேசித்துநடக்கவேண்டும்.

சீஷ. நான் என் முழு இருதயத்தினாலும் பராபரனே நேசிப்பதாவதென்ன?

போ. உனதிருதயத்திலுள்ள இலவுகை இச்சைகளை அகற்றித தேவன்புகொண்டு தேவதொண்டில் பிரதிவைப்பதே முழு இருதயத்தாலுந் தேவனை நேசிப்பது.

2d, Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [10,000.
1842.

சிஷ். முன்னே நீக்கிப்போட வேண்டுமென்ற குணங்கள் இருதயத்திலேயிருக்கப் பராபரனை நேசிக்கிற குணமுமிருக்கக்கூடாதா?

போ. வெளிச்சமும் இருளும் ஒன்றித்திருப்பதையும் வெம்மையுங் குளிர்மையும் ஒன்றித்திருப்பதையும் பகையுஞ் சிநேகமும் ஒன்றித்திருப்பதையும் பொய்மையும் மெய்மையும் ஒன்றித்திருப்பதையும் நாம் ஒருபொழுதுங் கண்டதில்லை அதுபோலப் பராபரனை நேசிக்கிற நேசமும் அவர் வெறுக்கிற தீக்குணமும் ஒன்றித்திருக்கக் கூடாது.

சிஷ். மேற்சொல்லிய தீக்குணங்களைப் பராபரன் என் வெறுக்கிறார்?

போ. அவரிடத்தில் இந்தத் தீக்குணங்களில்லாமையினாலும் அவைகள் தமதுசிட்டிகளாகிய மனிதருக்கு நட்டத்தையுண்டாக்குவதினாலும் அக்குணங்களிருக்கிற இருதயத்தையும் அவர் வெறுக்கிறார்.

சிஷ். முழு ஆத்துமாவினாலே பராபரனை நேசிக்கிறதெப்படி?

போ. உலகத்தின் அநித்திய பொருள்களைத் தொடாமல் மனதை நிறுத்தி அதினிடத்திலுண்டாகிய ஆங்காரத்தையும் அடக்கித் தனக்குக் கிடைத்திருக்கிற அநுபவங்களெல்லாந் தன் பலத்தினாலல்ல அவருடைய தயவினாலே பெற்றுக்கொண்டதென்றும் அவருடைய தயவில்லாவிடில் தான் சுகஅநுபவத்துக்குரியவனல்லத் துக்க அநுபவத்துக்கே உரியவனென்றும் அவர் தன்னை உண்டாக்கினதுந் தான் அக்கிரமஞ்செ

ப்தபொழுதே தன்னை அழித்து ஆக்கினைபண்
ணுகிறுப்பதுந் தனது அக்கிரமங்களைப் பொ
றுத்துக்கொள்ளச் சித்தமாயிருப்பதும் அவரு
டைய மட்டுல்லாத இரக்கமென்றும் எண்ணி
த் தன்னை வெறுத்து அவரை விரும்பி நடப்ப
தே அவரை ஆத்துமாவிலுலே சேரிப்பதாம்.

சீஷி. நமக்குண்டாயிருக்கிற அனுபவங்கள்
நமது மூயற்சியிலுலல்லப் பராபரனுடைய த
யவிலுலே யென்றுசொல்வது சரியா?

போ. நாம் எக்காரியத்திலும் மூயற்சியுள்
ளவர்களாயிருக்கும் வகைகளைத் தந்து அந்தவ
கைகளினின்று மூயற்சிசெய்தால் அதற்குப் ப
லனைத் தாமே அடைவிப்போமென்றும் அம்
மூயற்சியை விட்டுச் சோம்புள்ளவர்களாயிருந்
தால் நட்டமேயுண்டாகுமென்றுங் காட்டியி
ருப்பதினுலும் நாம் மூயற்சிப்பட்டும் அநேக
ங் காரியங் கைகூடாதிருப்பதையும் மூயற்சிப்
பட அறியாதிருக்குங்காலத்திலே அநேக நயமு
ண்டாயிருப்பதையுங் காண்கிறதினுலும் நாம் உ
ருவாக்கப்பட்டதுங் கடைசியிலே மோட்சஞ்
சேருவதும் இடையிலே உண்டாயிருக்கிற அ
னுபவங்களும் நமது மூயற்சியிலுலல்லப் பரா
பரனுடைய தயவிலுலென்று அறியவேண்டும்.

சீஷி. பராபரனே மூழுமனதினுலும் சேரிப்
பதாவதென்ன?

போ. உலகத்திலே உள்ள பொருள்களில்யா
தொன்றை யாதொருதன் விரும்பினுல் தனக்கு
வருகிறபொருன்நட்டத்தைப் பாராமலும்உண
டியுறக்கத்தைப் பாராமலும் இராப்பகலென்

தில்லாமலும் விரும்பின காரியங் கைகூடுமளவு
ம் அதிலே தொடர்ந்துநிற்கிறுன் அதுபோலத்
தனக்குள்ள பொருள்களெல்லாம் நட்டம்போ
லுஞ் சரீரந்தான் அழிந்துபோக வந்தாலும்
அவைகளை எண்ணுமலும் அவைகளைக் குறித்து
யோசனைபண்ணுமலுங் கவலைப்படாமலும் ம
னதை நிறுத்தி அவரை நேசிப்பதான அந்த ஒ
ரு காரியத்திலே மாத்திரம் மனதைச் செலுத்
திக்கொண்டிருப்பதே முழு மனதிலுலும். நே
சிப்பதாம்.

சிஷி. முழுப் பலத்தினுல் அவரை நேசிப்ப
தெப்படி?

போ. உலகக் காரியத்தைப் பார்க்கிறதற்கு
ண்டான பலத்திலுந் தேவகாரியத்தில் அதிக ப
லங்கொண்டும் அதற்குண்டான முயற்சியிலும்
இதில் அதிக முயற்சிகொண்டும் நடப்பதேமு
ழுப் பலத்தினுலும் நேசிப்பதாம்.

சிஷி. இப்படியே கர்த்தாவை நேசிக்கிறவன்
எப்படி நடப்பான்?

போ. பணிதல் பணிசெய்தல் வாழ்த்தலெ
ன்னும் மூவகை வழிபாட்டையுங் கொண்டிரு
ப்பதுமன்றித் தனக்கு அவரை அறிவித்த பர
மகுருவாகிய கிறிஸ்துநாதரைத் தன் சீவனிலும்
அதிகமாக நேசித்துச் சகலரும் அவரை அறிய
வும் வழிபடவும் வேண்டுமென்கிற அவாக்கொ
ண்டு அதற்கேற்ற வழிவகைகளையுந் தேடி அ
வருக்கமைந்தவனுய் அவருடைய தெய்வீக கு
ணங்களுக்கு இசைய நடப்பான்.

சிஷ். கத்தாவைப் பணிந்துகொள்ளும் விதமென்ன?

போ. சிருட்டிகளில் யாதொன்றையும் ஒப்பிடக்கூடாத அருபியாயும் ஆனந்த வடிவாயும் மனம்வாக்குக் காயங்களுக்கெட்டாத அளவிறந்த ஒளியாயும் இருந்தும் தமதடியவர்களுக்கு எளிதாய் வெளிப்படுகிறவராயும் அவர்களுக்குத் தஞ்சமாயும் எல்லாருக்கும் கிருபை செய்கிற இயல்பாயுமிருக்கிற கடவுளென்று சிந்தித்து எங்கெங்கேயிருந்து அவரை வேண்டுதல் செய்தாலும் அங்கங்கே அணுக்கிரகஞ் செய்வாரென்கிற நம்பிக்கையோடே ஆத்துமாவுஞ் சரீரமும் மனதுமொன்றித்துத் தாழ்ந்துகொள்ளுதலே பணிதலாம்.

சிஷ். அப்படியே அவரைப்பணிந்துகொள்ளுகிறவனுக்குக் காணும் அத்தாட்சி யென்ன?

போ. அவனுடைய மனதிலே பாவத்தைவெறுத்துப் பரிசுத்தத்தை விரும்புதற்கேதுவான குணமும், பராபரன் தன்மேலே ஐக்கமாயிருக்கிறார். தன்னை நேசிக்கிறாரென்கிற நம்பிக்கையுமுண்டு.

சிஷ். இத்தன்மை மகத்துவமுடைய கடவுள் எக்காரியங்களையும் வருத்தமின்றி நினைவிலே முடிப்பாரே, அவருக்கு ஒருவர் பணிசெய்யவேண்டுவதென்ன?

போ. அவருக்கு உலகங்களைச் சிருட்டித்தல்முதலிய தொழில்களெல்லாம் வருத்தமின்றிச் சித்தத்தில் நினைக்க மூடியுமென்பது நிச்சயமாயினும் அவருக்குப் பணிசெய்வது நமக்

கு நாமாயுங் கட்டளையாயும் நமக்கு அது ஒழுக்கமாயும் நாஞ்செய்ய வேண்டிய வழிபாட்டினெறு அங்கமாயும் இருக்கையாற் பணிசெவதுஅவருக்கு வேண்டாததாயிருந்து மிகவும் நமக்கு வேண்டுவதாயிருக்கின்றது.

சீஷி. அவருக்கு நாஞ்செய்யக்கூடிய பணியென்ன?

போ. நமது மனம் வாக்குக் காயங்களெல்லாம் நம்முடையதல்ல அவருடையதென்றும் நாம் அவருடைய அடியவர்களென்றும் அவர் நமது எசமானென்றும் அவரையறிந்து வணங்குகிற சகலரும் அவருடைய பிள்ளைகளென்றும் மதித்து அவருடைய மகிமையும் அவருடைய புத்திரரின் மகிமையும் பிரபலியப்படத் தக்கதான சகல காரியங்களைச் செய்வதும் அவரை அறிய விரும்புகிறவர்களுக்கு அவருடைய திருவசனத்தைப்படிப்பிப்பதும் அதினுட்பொருளை ஆராய்வதும் அதைவிளங்கச்சொல்வதுமுதலிய பலவுமேடன்றி அவருடைய புத்திரரைக் காண்பதும் அவர்கள் தங்கள் ஒழுக்கத்திலாவது தங்கள் விசுவாசத்திலாவது குறைவுபடாமல் அவைகளில் வளரப்பண்ணி அவர்களுடைய பலவீனங்களை நீக்கி அவர்கள் தங்கள் உணர்விலே கண்ட நற்காரியங்களை மறந்துபோகாமல் நினைப்பூட்டி மற்றுமுள்ள தேவவழிபாட்டிலே நிலைநிறுத்தி வைப்பதும் அவர்களுக்கு வியாதி வந்தகாலங்களில் அவர்களுக்கு மருந்துமுதலிய கொடுத்து உதவிசெய்வதும் வறுமைவந்த காலங்களில் அவர்களுக்கு அன்னவஸ்திரமுதலி

ய கொடுத்து உதவி செய்வதும் அவருக்குப்ப
ணிசெய்தலாம். ஆதலன்றித் தானுண்ணும்பொ
ழுது அவருக்குப்பணிசெய்ய உடல் நிற்கும்ப
டி அவர் தந்த உணவென்றும் அவ்வுணவை அ
வருக்குப் பணிசெய்யும் பொருட்டே உண்கி
றேனென்றும் உடைதரிக்கும்பொழுது அவரு
க்குப் பணிசெய்யவேண்டிய உடற் சுகத்துக்
கும் அபிமானத்துக்கும் மாத்திரமே அதைத்
தரிக்கிறேனென்றும் விவாகம்பண்ணும்பொழு
து புத்திரோற்பத்திமுதலிய இல்லொழுக்கத்தி
ற்கே விவாகம்பண்ணுகிறேனென்றும் அவைக
ளெல்லாம் அவருடைய சித்தமாயுள்ள கட்டளை
யாயுமிருக்கையால் அவற்றிற்கு அமைவதே க
டனென்றும் வேலைசெய்யும்பொழுது நமக்கு
ம் மற்றவர்களுக்கும் ஆகாரமுண்டாயிருக்கச்
சோம்பில்லாமல் வேலைசெய்யும்படி பராபர
ன் கட்டளையிட்டிருக்கையால் அதைச்செய்கி
றேனென்ற எண்ணத்தோடே செய்வதும் அ
வருடைய பணியாகவேயிருக்கின்றது. அன்றி
யும் வேதவசனத்தைக் கைவிடாதிருப்பது அ
வரை விடாதிருப்பதாகவும் அவ்வசனத்தை வா
சிப்பது அவருடனே பேசுவதாகவும் அதை ஆ
ராய்வது அவரோடே ஆலோசனைபண்ணுவ
தாகவும் எண்ணி அதைக் கைக்கொண்டு நடப்
பது அவருக்குப் பணிசெய்வதாம். இவைக
ளையன்றி மெய்த்தெய்வ பக்தியுள்ளவர்களுக்
கு என்னென்ன தொண்டுசெய்தாலும் அவைக
ளெல்லாம் அவருக்குச்செய்ததாகவும் அவர்க
ளுக்கு என்னென்ன இடறுசெய்தாலும் அவ

ருக்குச் செய்த இடரழுகவுமுடியுமென எண்ணி விலகுதலும் பணிசெய்தலாம்.

சிஷ். அவரை வாழ்த்துவது எப்படி?

போ. மனதார உண்டாயிருக்கிற விருப்பத்தோடும் உருக்கத்தோடும் அவருடைய நாமத்தை யெடுத்துச்சொல்வதும் அவருடைய இலட்சணங்களை யெடுத்து வியந்துபேசுவதும் அநேகர் கூடி அவர்மேற் சங்கீதங்களைப் பாடுவதும் அவர் தமது தொண்டருக்கு வந்திருக்கட்டுகளை விலக்கிக் காத்த கிருபைகளை யெடுத்து வியந்து சொல்வதும் அவர் பாவிகளுடைய ஆத்துமாவுக்கு இரட்சகரையுஞ் சரீரத்துக்குச் சந்திரன் சூரியன் நட்சத்திரம் மழை காற்று முதலிய பலவற்றையுங் கொடுத்திருப்பதையுங் கடைசியிலே மோட்சவாழ்வை இந்திருள்வதையும் இவைபோலவன் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லி நினைத்துத்துதிப்பதே வாழ்த்தலாம்.

சிஷ். மனிதன் தன்னைப்போற் பிறனையும் நேசிக்கவேண்டுமென்பதென்ன?

போ. ஒருவன் தனக்காகாத காரியம் பிறனுக்கும் ஆகாதென்றும் அப்படிப்பட்ட காரியத்தைப் பிறனுக்குச்செய்வது பாவமென்றும் பிறர் தனக்குச் செய்யவேண்டுமென்று தான் விரும்புகிற காரியமேதண்டோ அவைகளைப் பிறருக்குத் தான்செய்வதே நீதியென்றும் எண்ணிக் கபடமில்லாமல் நடப்பதே தன்னைப் போற் பிறனைநேசிப்பதாம்.

சிஷ். தனக்காகாத காரியமென்ன?

போ. ஒருவன் தன்னுடைய ஒழுக்கத்திலாவ

து கல்வியிலாவது குலத்குடியிலாவது யாதொரு கனவீனத்தைப் பிறனுல் அடையும்பொழுதுதான் மிகுந்த மனவிதனத்தை அடைவதையெண்ணித் தானும் பிறனுக்கு அப்படிப்பட்டனதச்செய்து அவனைக் கனவீனப்படுத்தாமலும் தன்பொருளைப் பின்னெருவன் எடுத்துக்கொள்ளும்பொழுதுந் தன் மனைவியைப் பின்னெருவன் நிரபிமானப்படுத்தும் பொழுதும் அவனுக்கு எவ்வளவு மனவிதாபமுண்டாயிருக்குமோ அதை உணர்ந்துதானும் பிறருக்கு அப்படிப்பட்ட தீமைகளைச்செய்யத் துணியாமல் எல்லாரையுஞ் சகோதரர்களாகவும் பாவித்து நடப்பதே தன்னைப்போற் பிறரை நேசிப்பதாம்.

சீவி. இவ்வுலகத்திலே பெரியோர்களுஞ் சிறியோர்களுஞ் செல்வருந் தரித்திரரும் இராசாக்களுங் குடிகளும் போதகருஞ் சீஷரும் சமானும் பணிவிடைகாரனுமாகவே யிருக்கிறார்கள். இவை உலகவழக்கத்துக்கு வேண்டுவதாகவேயிருக்கின்றன. அப்படியிருக்க நாம் உயர்ச்சி தாழ்ச்சியில்லாமல் எல்லாரையும் ஒரு சரியாகவும் சகோதரராகவும் எண்ணி நடக்கக் கூடுமா?

போ. அப்படி இருப்பது நிசந்தான். ஆகிலும் அவர் அவரே தமக்குத் தமக்கு இட்டபடியே அந்தந்தக் காரியத்தை நடத்தும்பொழுது அதற்கதற்கேற்ற உயர்ச்சி தாழ்ச்சியுடையவர்களாயிக் காணப்படுவதேயன்றிக் கதிதாவுக்கு முன்பாக இப்படியான வித்தியாசங்கள் யாதொன்றுமில்லை. ஆதலால் இவ்வுலகத்திற்

பெரியோர்களென்று எண்ணப்படுகிறவர்கள் தாமுஞ் சிறியோர்களென்று தள்ளப்படுகிறவர் களுக்குள்ளே யாதொருவர் தெய்வபத்தியுடை யவர்களாயிருந்தால், அவர்களையே தங்களிலு மே பெரியவர்களென்றெண்ணித் தங்களைப்பார் க்க அவர்களையேகதித்தர் அதிகமாய் நேசிக்கிறு ரென்றுந் தாங்கள் அவர்களுக்குப் பணிவிடை செய்வதே தங்களுக்குப் பாக்கியமென்றும் மோட்சத்திலே தங்களிலும் அவர்கள் அதிக னமும் மகிமையும் அடைந்திருப்பார்களென் றும் எண்ணி அவர்களைச் சிறியவர்களென்று தள்ளாமல் தமக்கு அவர்களே அன்பான சகோ தரரென்றும் அவர்களை நேசித்து நடக்க வே ண்டும். சிறியவர்களென்றெண்ணப்படுகிறவர் கள் தாமும் பராபரன் தங்களை அந்நியமையி ல் வைத்து வேறநேகரைத் தங்களிலும் மேற் பட்ட செல்வமும் மேன்மையுமான நிலைமை யிலே வைத்தது அநியாயமென்றெண்ணுமல் அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாயிருந்தா லு ந் தங்களுக்கு அதலுலே யாதொரு நட்டமு ல்லவென்று எண்ணித் தாங்கள் அவர்களுக்கு ச் செய்யவேண்டிய மரியாதையிலுங் கனத்து லுஞ் சற்றுங் குறையாமலும் அவர்களுக்குத் தாங்கள் நடக்க வேண்டிய முறைபோல ந டந்து அவர்களுந் தாங்களும் ஒருவரில் ஒரு வர் சகோதர பட்சமாயும் இம்மையிலேயும் மறுமையிலேயும் பாக்கியசாலிகளாயிருக்கவே ண்டுமென்ற விருப்பத்துடனே எல்லார்மேலு ந் தயவுவைத்து நடக்கவேண்டும். இவ்வூர்களி

லே இருக்கிற நளவர், பள்ளர், பறையர், திரும்பரென்னுஞ் சில சாதிகள் மிகவும் இழமான வர்களாயும் ஒழுக்கத்திலே மிகவுந் தவறுபட்ட வர்களாயும் ஆசார பவித்திரமில்லாதவர்களாயிருக்கிறார்கள். இவர்களோடே நாமெப்படியிணைந்து சகோதரபட்சமாய் நடக்கலாமென்னில் இப்படிப்பட்ட சாதிவித்தியாசம் ஆதிகாலந் தொடுத்து உள்ளதல்ல. கத்தர் ஆதியிலே ஒரு மனிதனையும் ஒரே மனிதனையும்உண்டாக்க அவர்களிலேயிருந்து வழிவழியாய்ச் சகலசனங்களுந் தோற்றினார்கள். பின்பு ஒவ்வொருவர் ஒவ்வொரு தொழிலிலே மூற்பட்டு அதையே கைக்கொண்டு நடந்து வந்தநிமித்தம் அவர்களுக்குள்ளே இவ்விதமான வேற்றுமை வந்ததேயன்றிப் பிறப்பிலுலே வந்ததல்ல அவர்களுடைய சுபாவமும் மற்ற மனிதர்களுடைய சுபாவம் போல ஒன்றாயிருக்குமேயன்றி வேறல்ல. பிதாமாதாவுடைய தகாத பழக்கத்திலுலே பிள்ளைகளும் யோக்கியமற்றவர்களாகிறார்கள் பின்னுந் தகாத கூட்டத்தாரோடே கூடியிருப்பதினால் அவர்கள் இனமானவர்களாக நல்லொழுக்கமற்றுப்போகிறார்கள். அவர்களை அந்தக் கூட்டத்தைவிட்டுப் பிரித்தெடுத்து நற்கூட்டத்திற் சேர்த்து நல்ல பயிற்சிகளைப் பயிற்றினால் அவர்கள் அதிகமாகத் திருந்துவார்கள். அவர்களுடைய இனத்தன்மையெல்லாம் அப்படியே சீர்ப்பட்டுக் கிறிஸ்துநாதரை விசுவாசித்துப் பரிசுத்தாவியானவரின் அருளிலுலே குணப்படும்பொழுது அவர்களுடைய பழய ஈனமா

ன குணங்களெல்லாம் ஒழிந்து புதிய நற்குண
ங்கள் வந்து சேர்ந்து ஒரு புதிய சிருட்டியாயி
ருப்பார்கள் அப்படிப்பட்டவர்களுடனே நா
ம் ஐக்கமாய்க் கொண்டாடி நடப்பதற்கு யா
தொரு தடையுமில்லை. இப்படிப்பட்டவர்கள்
எப்படிப்பட்ட நற்குணமுடையவர்களாயிருந்
தாலும் அவர்களிடத்திலே நின்பனவு குடிப்ப
னவுபணணிப் பெண்கொண்டு கொடுத்துச் ச
ம்பந்தங்கலக்கக் கூடாதபடியால் நாம் அவர்
களோடே ஐக்கப்பட்டிருக்கக் கூடாதே யெ
ன்னில் அவர்களிடத்தில் அப்படிப்பட்ட காரி
யங்களைச் செய்யவேண்டுவதாயிருந்தால் அதை
ச் செய்யாமலிருப்பதற்குத் தகுதியான நியாய
மொன்றுமில்லை அப்படி நியாயமொன்றுமில்
லாதிருக்கையில் அவைகளைச் செய்யப் பின்னி
ற்கிறவன் அவர்களோடே ஐக்கமாயிருக்கிறான்
என்று சொல்லக் கூடாது. ஆகிலும் அப்படி
ப்பட்ட காரியங்களை மறுபெயரிடத்திற் செய்
யவும் இவர்களிடத்திற் செய்யாதிருக்கவும் வே
றுவேறுதடைகளும் பெறுமான நியாயங்களு
ம் இருந்தாலொழிய மற்றும்படி சிறுமை பெ
ருமையென்ற சாதிவித்தியாசத்தைப் பற்றி எவ
ர்களையென்றாலுந் தள்ளுகிறதற்கு ஒருவிதத்தி
லும் நியாயங் காணமாட்டாது.

முற்றிற்று.